ஹோமியோபதி

நிர்வாக ஆசிரியர் : டாக்டர் V. R. மூர்த்தி

ஏப்ரல் 1952

வருக ராஜாஜி ... 2

டாக்டர் ஹானிமன் ... 3

சுக பேதியா? எம வாதையா? ... 12

ஹோமியோபதியின் இன்றைய நிலை ... 15

தமிழ் நாட்டில் ஹோமியோபதி ... 18

ஹோமியோபதியின் வேதாந்தம் ... 19

டாக்டர் மூர்த்தியின்

"கோல்டுராப்ஸ்"

[காச நிவாரணி]

பாட்டில் ஒன்றுக்கு விலை ரூ. 3-12-0

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

கும்பகோணம்

ஹோமியோபதி

VOL. 6 ஏப்ரல் 1952 NO. 4

வருக ராஜாஜி!

நமது சென்னை இராஜ்ஜியத்தில் மந்திரிசபை அமைப்பு விஷயமாக ஏற்பட்டிருந்த குழப்ப நிலைமை நீங்கி நமது அரும்பெரும் தலைவர் ராஜாஜி அவர்கள் தலைமை தாங்கும் மந்திரி சபை நிறுவப் பட்டிருப்பது குறித்து நாம் அனைவரும் மகிழ்ச்சி அடைகிறோம். ராஜாஜியைத் தலைவராகக் கொண்ட மந்திரி சபையில் சேர்க்கப்பட்டிருக்கும் இதர 14 மந்திரிகளும், நல்ல அறிவாளிகளாகவும், உலக அனுபவம் அதிகம் உடையவர்களாகவும் நேர்மையைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த விஷயம். இந்த நல்ல சூழ்நிலையிலே, சுகாதார வைத்திய இலாகா மந்திரி ஸ்ரீமான் A. B. ஷெட்டி அவர்கள் ஏற்கனவே இந்த இலாகாக்களில் அனுபவம் உடையவராதலின், அவர் இப்பொழுது அவருக்கு அருமையாகக் கிடைத்திருக்கிற புதுத் தலைமையின்கீழ், மக்களுக்கு நன்கு பயன்படும் வழியிலே, பல முயற்சிகளை எடுப்பார் என்று நம்புகிறோம்.

நமது இராஜ்யத்தில் அநேகமாக அனைவரின் நல்லெண்ணத்தையும் ஆசியையும் பெற்ற மந்திரி சபையும் நமது சுகாதார மந்திரி கனம் ஷெட்டியும் கூடிய விரைவினில் ஹோமியோபதி வைத்திய முறை நம் நாட்டுக்குச் செய்யும் சேவையைக் கவனித்து, அதற்கு அங்கீகாரமும் ஆதரவும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

"டாக்டர் ஹானிமன்"

1755-ம் வருடம் ஏப்ரல் மீ 10உ ஹோமியோபதியின் தந்தை டாக்டர் சாமுவேல் ஹானிமென் பிறந்தார். இன்று அன்னவருடைய 197-வது பிறந்த தினம். இந்த நன்னாளில் நாம் அனைவரும் நமது பெரியாரையும், அவர் உலகுக்குச் செய்த பெரும் பணியையும் நம் நினைவில் கொண்டுவந்து வணங்கவேண்டியது அவசியமாகும்.

இந்த உலகில் உண்மையான பெரியார்கள் பல காலமாகவே அவ்வப்போது ஆங்காங்கு தோன்றி வந்திருக்கின்றனர்கள். உண்மையிலேயே ஒருவரைப் 'பெரியார்' என்று உலகம் அழைத்தது என்றால், அம்மாதிரி ஒருவரின் வாழ்க்கை வரலாறுகளை நாம் அறியப்புகின் அவைகளில் அனேக ஒற்றுமைகள் இருப்பதை நாம் காண்போம்.

சலியாத உழைப்பு, மக்களிடத்தும், தாழ்த்தப்பட்டுத் தவறு செய்யப்பட்டிருப்பவரிடமும் எல்லையற்ற அன்பு; சத்தியத்தைக் கடவுளெனப் போற்றும் பண்பு; இவை மூன்றும் முக்கியமாக முன்னின்று காக்ஷியளிப்பதைக் காண்போம். இவைகளைக் கைப்பிடித்து நடைமுறையில் கொண்டுவர அனேக இன்னல்களையும் எதிர்ப்புச் சக்திகளையும் எதிர்த்து நின்று போராடவேண்டி வருகின்றது. இந்த உண்மைகளை உலகம் அறியப் பரப்பவேண்டி இருக்கிறது. இதிலும் அனேக கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கவேண்டி வருகிறது. அறியாமையினால் எதிர்ப்போர், அதிகாரத்தினால் எதிர்ப்போர், மற்றும் சுயநலத்தின் காரணமாக எதிர்ப்போர், இவர்கள் தனித்தனியாகவும், கூட்டு முயற்சியிலும் எதிர்ப்பதைத் தாங்கி எதுவரினும் தான் கண்ட உண்மைகளை விடாப்பிடியாகப் பிடித்து வெற்றி காணுவோரையே "பெரியார்" என்று அழைக்கிறோம். இத்தகைய பெரியார்கள் அனைவரைப்பற்றி நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம். முக்கியமாக ஏசுநாதர், முகம்மது நபி, புத்த பெருமான், நமது மஹாத்மா காந்தியடிகள், பாரதியார் இராமலிங்கஸ்வாமிகள் முதலியவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் நாம் மேலே கூறியவைகளுக்குப் போதிய சான்றாகும். இக்கூட்டத்திலே சேர்ந்தவர்தாம், நமது ஹோமியோபதியின் தந்தையான டாக்டர் சாமுவேல் ஹானிமென் ஆவர் என்பது அன்னவரின் வாழ்க்கை வரலாறுகளைத் தெரிந்துகொண்டவர்களுக்குப் புலப்படும்,

ஜெர்மனியில் சாக்ஸோனி (Saxony) யிலுள்ள மெஸ்ஸீன் (Meissen) என்ற இடத்தில் 1755-ம் வருடம் ஏப்ரல் மாதம் 10உ ஹானிமென்

பிறந்தார். இவருடைய தந்தையார், ஒரு வர்ணவேலை ஓவியராகும். இள வயதிலிருந்தே தந்தையார் தனயனுக்கு வீட்டிலேயே நன்னெறி உபதேசமும் சிறிது படிப்பும் சொல்லிக்கொடுத்து வந்தார். பள்ளிக்கூடம் செல்வதும் அதிகப் புத்தகப் படிப்பும் தன் மகனுக்குத் தேவையில்லை என்பது தந்தையின் அபிப்பிராயம். இது காரணம் பற்றியே, இரவுகளில் ஹானிமென் விளக்குவைத்துக்கொண்டு படிப்பதைத் தந்தை ஆட்சேபிப்பதுண்டு. ஆனால் இளம் ஹானிமென்னுக்குப் படிப்பில் இருந்த ஆர்வம் கட்டுக் கடங்காததாக இருந்தமையால், தந்தைக்குத் தெரியாமல், இரவுகளில் தன் கை விளக்குடன் எங்காவது ஒளிந்துகொண்டாவது பல நூல்களைப் படித்துத் தான் வந்தார். இவ்வாறு படித்ததின் காரணமாக, தன்னுடைய பன்னிரண்டாவது வயதில், தன் வயதுள்ள மாணவர்களுக்கு கிரேக்க பாஷையில் பாடம் சொல்லி வந்ததுடன் தன்னுடைய இருபதாவது வயதில் மூன்று பாஷைகளில் பாண்டித்தியம் பெற்றதுடன், மற்றும் பல பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவராகவே விளங்கினர்.

இவ்வளவு அறிவு வளர்ச்சியும் தன் மகனுக்கு ஏற்பட்டிருக்கிது என்பதைத் தெரிந்துகொண்ட தகப்பனுக்கு, அதற்குமேல் மகனை எந்த வழியில் திருப்புவது என்பது ஒரு பிரச்சினையாகவே ஆகி விட்டது. வேறு வழியின்றி 1775-ம் வருடம் லிப்ஸிக் (Leipzig) சர்வகலாசாலையில் அவர் சேர்ந்து படிக்க அனுமதிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. கலாசாலையில் சேர அனுமதி கிடைத்ததே ஒழிய அதற்கு வேண்டிய பண வசதிக்கு என்ன செய்வதென்ற பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. ஆகவே பகல் வேளைகளில் கலாசாலையில் படிக்கும் வேளைகள் தவிர மற்ற சமயங்களில் இதர வேலைகளைச் செய்து சம்பாதித்துத் தன் செலவுகளைச் சரிக்கட்டி வந்தார். இரவுகளில் பல நூல்களை மொழிபெயர்ப்பதும், ஒழிந்த வேளைகளில் பிறருக்குப் பாடம் சொல்லுவதும் அவருடைய சம்பாத்தியத்திற்கு ஏதுவாகின. சில காலம் கழிந்து 'ஹெர்மான்ஸ்டாட்' (Hermanstadt) என்னும் இடத்திலுள்ள ஒரு பிரபுவிடம், அவருடைய சொந்த வைத்தியராகவும், புத்தகசாலை அதிகாரியாகவும் வேலைக்கு அமர்ந்தார். இந்த வேலையில் அவர் அமர்ந்தது அவருடைய அறிவுத் தாகத்தை நிவர்த்திசெய்து கொள்ள ஏதுவாயிற்று. புத்தகசாலையிலுள்ள எல்லாப் புத்தகங்களும் எச்சமயத்திலும் அவருக்குக் கிடைக்கலாயின. இந்த வசதியை அவர் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளவும் செய்தார். அந்த இடத்தைவிட்டு அவர் வெளியேறும் போது அவருக்கு 24 வயதே ஆகியிருந்தது; ஆனல் அப்பொழுது அவருக்குத் தெரிந்திருந்த பாஷைகள் பதினென்று! 1779-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 10வ எர்லாஞ்சன் சர்வகலாசாலையில் அவருக்கு "வைத்திய மேதை" (M. D.=Doctor of Medicine) என்ற பட்டம்

வழங்கப்பட்டது. அதன் பிறகு ஒரு வருடம் பிரயாணங்களிலும், மேலும் இரண்டு வருடங்கள் இரசாயனம், கனிப் பொருள் ஆராய்ச்சி முதலியவை களிலும் ஈடுபட்டார்.

1781-ம் வருடத்தில் கோம்மர்ன் (Gommern) என்ற ஊரில் ஒரு வைத்தியராகத் தொழில் நடத்த ஆரம்பித்தார்; அதற்கு அடுத்த வருடத்தில் அதாவது 1782-ம் வருடம் டிஸம்பர்-மீ 1உ டெஸ்ஸே (Dessay) என்ற இடத்தில் ஜோஹானு குச்லர் (Johanna Kuchler) என்ற பெண்மணியை மணம் செய்து கொண்டார். இந்தக் காலத்தில் அனேக மொழிபெயர்ப்பு நூல்களையும் வெளியிட்டார் முதன் முதலாக அவர் வெளியிட்ட வைத்திய நூல் "பழைய இரணங்களுக்குச் சிகிச்சை பற்றி" (On the Treatment of old sores & ulcers) என்பதாகும்.

வைத்தியத் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது அவருக்கு ஒரு உண்மை புலப்படலாயிற்று. இது விஷயமாக அவர் எழுதி வைத்திருக்கிற விஷயத்தை அவர் வாய் மொழியாகவே கேட்போம்.

"நமது சகோதர்களிடையே தோன்றும் இன்னதென்று தெரியாத வியாதிகளை, அவைகளைப்பற்றி நாம் சரிவர அறிந்து கொள்ளாத ஔஷதங்களைக்கொண்டு வைத்தியம் செய்வது சரியென்று எனக்குத் தோன்றவில்லை. நாம்கொடுக்கும் ஔஷதங்களோ மிகவும் சக்தி வாய்ந்த பொருள்களாக இருக்கின்றன. இவைகள் இலகுவாக இறப்பை உண்டுபண்ணி விடலாம் அல்லது இவைகள் நிவர்த்திக்கவே முடியாத பல தீராத நீடித்த வியாதிகளையும் உண்டுபண்ணி விடலாம். ஆகவே நமது சகோதரர்களைக் கொல்லும் ஒரு கொலையாளியாக நான் இருப்பதை நினைத்து அதிர்ச்சி அடைந்தேன். இந்த எண்ணம் என் மனதில் உதித்துப் புண்படுத்தியதால், நான் வைத்திய சிகிச்சை செய்வதையே நிறுத்திவிட்டேன், ஏனெனில் ஒன்றிரண்டு நபர்களுக்குக்கூட சிகிச்சை செய்தால் அதனால் நாம் அன்னவருக்குக் கெடுதல் செய்துவிடுவோமோ என்கிற பயம் என்னைப் பற்றிக் கொண்டதால், இரசாயன சாஸ்திரத்தையும், இலக்கியத்தையும் மாத்திரம்.ஆராய்ச்சி செய்துகொண்டு வந்தேன்."

இப்படியாக ஒரு "வைத்திய மேதாவி" பிற்காலத்தில் உலகத்தில் வைத்திய சிகிச்சைகளில் புரட்சியை உண்டு பண்ணிய ஒருவர், தாம் மணம் செய்து கொண்டு, தன் பொறுப்புகளை அதிகம் கொண்ட புதிதில், வேறு யாதொரு யோஜனையும் இல்லாமல் தன் தொழிலை தியாகமே செய்து

விட்டார், இது 1784-ம் ஆண்டில். மனச்சாட்சிக்கு மிஞ்சிய குருவுமில்லை, மனச்சாட்சி ஒப்ப நடப்பதுதான் பெரிய தர்மம்'' என்பதற்கிணங்க இக்காரியம் ஹானிமெனுல் செய்யப்பட்டது. அக்காலத்தில் செய்து வரப்பட்ட சிகிச்சைகள் அநாகரீகமாகவும் முறட்டுத்தனமாகவும் இருந்தது என்பது அன்னவரின் அபிப்பிராயம். அன்று நடமாடிய இதர வைத்தியர்களைப் போல இவரும் இருந்திருந்தால், இவரிடம் மக்களுக்கு இருந்த நம்பிக்கையை வைத்து ஏராளமாகச் சம்பாதித்திருக்கலாம்; ஆனுல் அவர் மனச்சாட்சி அதற்கு இடம் கொடுக்கவில்லை. தான் பட்டினியால் இறந்தாலும், தம்மிடம் நம்பிக்கை வைத்தவர்களுக்கு கெடுதல் செய்யக்கூடாது என்பதே அவரது குறிக்கோளாக இருந்தது.

ஆனுல் அவர் பட்டினி கிடக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை, ஏனெனில், அவருடைய மனதுக்குப் பிடித்த வேறு தொழில் ஒன்று அவருக்கு இருந்தது. அதுதான் ''மொழி பெயர்த்தல்'' அவருக்குப் பல பாஷைகளில் பாண்டித்யம் ஏற்பட்டிருந்தது இதற்கு உதவுவதாயிற்று. ஆகவே இத்தொழிலின் மூலம் தனது அன்றுடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடிந்தது.

உலகத்திலே ஒரு மனிதனுக்கு எந்தக் கஷ்டம் வந்தாலும், ''இதுவும் நன்மைக்கே'' என்று ஒரு வேதாந்தம் உண்டு. இந்த வேதாந்தம் அனேக சந்தர்ப்பங்களில் உண்மையாகவே ஆகிவிடுகின்றது. எது எப்படி இருப்பினும், இந்த வேதாந்தம் ஹானிமென் விஷயத்தில் உண்மையாகவே நன்மையைச் செய்துவிட்டது. இவ்வாறு 'மொழி பெயர்த்தல்' பணியில் ஈடுபட்டிருக்கும்போது, வில்லியம் கல்லன் (William Cullen) என்பவரால் எழுதப்பட்டிருந்த ஔஷதகுண பாடம் (Materia Medica) என்னும் புத்தகம் வந்தது. இதை மொழிபெயர்க்கும் காலை, அதில் 'சிங்கோனு மரப்பட்டையை'ப் பற்றி கல்லன் எழுதியிருந்த விஷயங்கள் ஹானிமெனுக்குத் திருப்தியை அளிக்கவில்லை. இப்பட்டை குளிர் முறைச்சுரத்திற்கு ஏற்றதாகக் கருதப்பட்டது ஆனுல் அது எவ்வாறு சுரத்தை சமனப்படுத்தும் என்று விபரம் கிடைக்கவில்லை. ஆகவே இந்த ஔஷதத்தை தன் சரீரத்திலேயே பரீட்சை பார்த்துவிட வேண்டும் என்கிற தீர்மானத்திற்கு வந்துவிட்டார். உடனே இந்தப் பட்டையின் திராவகத்தில் சுமார் 4 டிராம், விதம் நாள் ஒன்றுக்கு இரண்டு வேளையாக உட்கொண்டார். என்ன ஆச்சரியம்! இவருக்குக் குளிர்முறை சுரமே வந்துவிட்டது. இந்த ஔஷதத்தைச் சாப்பிடுவதை நிறுத்தினுல் சுரமும் நிற்கிறது; மறுபடியும் சாப்பிட ஆரம்பித்தால் சுரம் வந்து விடுகிறது. இந்த விஷயம் லிப்ஸிக் நகரத்தில் 1790-ம் வருடம் நடைபெற்றது. இதை ஆதாரமாகக் கொண்டு பல ஆராய்ச்சிகளை நடத்தினுர், மற்றும் வேறு பல ஔஷதங்களைக் கொண்டும்

சில ஆராய்ச்சிகளை நடத்தினர். தன் சரீரத்திலும், சுக சரீரிகளாக இருந்த தன் குடும்பத்தாரின் உதவிகொண்டும் பல நண்பர்களின் உதவிகொண்டும் இந்த ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டன. இவ்வாறு நடத்தப் பட்ட ஆராய்ச்சிகளின் விபரங்களையும் குறித்துவைத்துக் கொண்டார்.

இதன் இடையிலே இவருடைய குடும்பமோ பெருகிவிட்டது. குடும்பப் பெருக்கத்துடன் கூட தரித்திரமும் பெருக ஆரம்பித்தது. வாழ்க்கைச் செலவை சிக்கனம் ஆக்கும்பொருட்டு, தான் தங்கியிருந்த பட்டணத்தி லிருந்து ஒரு சிறிய கிராமத்திற்குக் குடியேறவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. அங்கு உடுக்க சரிவர ஆடைகள் இன்றியும் கால்களுக்கு பாத ரட்சைகள் இன்றியும், ஏழைகளிலும் பரம தரித்திரம் பிடித்த ஏழைகள் போலவே வாழவேண்டி இருந்தது. தரித்திர காலத்தில், இயற்கையின் சோதனை அதிகமாவதுபோல இங்கு இவருடைய குழந்தைகள் அடிக்கடி நோய்வாய் பட்டன. இவ்வாறு தன் குழந்தைகள் நோய்வாய்பட்டதையும் உபயோகித்துக்கொண்டு தன்னுடைய ஆராய்ச்சியினைத் தீவிரமாக நடத்தி, தான் கண்ட உண்மைகளை நிருபணம் செய்து கொண்டார். இவ்வாறு நடத்தப்பட்ட சோதனைகள் சுமார் ஆறுவருட காலங்கள், நல்ல தேகா ரோக்கியமுள்ளவர்களிடையேயும், ரோகிகளிடமும் நடத்தப்பட்டன. ஒவ் வொரு சோதனையிலும் அவர் கண்டுகொண்ட உண்மை ஒன்றுதான். அதாவது:

"ஒரு மருந்தை அதிகமான அளவில் உட்கொண்டால் ஒரு சுக சரீரிக்கு வியாதியின் குறிகள் தோன்றும். அதே மருந்தைக் குறைந்த (மிகக் குறைந்த) அளவில் உட்கொண்டால் (அதிக அளவில் உட்கொண்டால் இது எந்தவிதமான குறிகளை உண்டாக்குமோ, அதே குறிகளை உள்ள) வியாதியை நிவர்த்தி செய்யும்." என்பதே. இம்மாதிரியாகப் பல சோதனை களை நடத்தி முடிவாக 1796-ம் வருடத்தில் அக்காலத்தில் வெளியான வைத்திய சஞ்சிகையில் தன் சோதனைகளால் கண்டு கொண்ட விஷயங் களை வெளியிட்டு ஒரு கட்டுரை எழுதினர். இந்த முதல் கட்டுரை யின் மூலமாகவே ஹானிமன் ஹோமியோபதியின் மூல தத்துவத்தை வெளியிட்டார்.

தான் கண்ட உண்மைகளை முதன்முதலில் உலகுக்கு அறிவிக்கும் படியான சந்தர்ப்பங்கள் பல அவருக்கு ஏற்பட்டது. குறிப்பாக 1792-ம் வருடத்தில் ஜியோர்ஜென்தால் (Georgenthal) என்னும் இடத்தில், சித்தப் பிரமைக்குச் சிகிச்சையளிக்கும் வைத்தியசாலை ஒன்றை ஆரம்பித்தார். இந்த இடத்தில் க்ளோகன்பிரிங் என்னும் ஒரு அரசாங்க மந்திரிக்கு சிகிச்சை அளிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இந்த க்ளோகன்பிரிங்

பிரபுவுக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டு அதிகக் கடுமையாகிய பிறகு பலர் சிகிச்சை செய்தும் பயனில்லாமல் போகவே, ஹானிமென்னிடம் அழைத்து வரப்பட்டார்.

அக்காலத்தில் சித்தப்பிரமைக்கு வைத்தியம் செய்வதே மிகவும் அலாதியான ஒரு முறையாகும். ஒருவருக்கு துர்பாக்கிய வசமாக இவ் வியாதி ஏற்பட்டுவிட்டால் துஷ்ட மிருகங்களுக்குக் கிடைக்கும் மரியாதையை விட அதிக மரியாதை நடக்குமாம். அவர்களைச் சங்கிலியால் பிணைத்து தடிகொண்டு அடிப்பது ஒரு நல்ல சிகிச்சை என்று கருதப் பட்டு வந்ததாம். இது மாத்திரமா? இவர்களைத் தனி அறைகளில் அடைத்து வைத்து, சிற்சில சமயங்களில் வருவோர் போவோருக்கு வேடிக் கையும் காட்டுவார்களாம். ஆகவே இவர்களுக்கு தங்கள் வியாதியிட மிருந்து விடுதலை கிடைப்பது சாவு ஏற்படும்பொழுதுதான். ஆனால் நமது ஹானிமென் அக்காலத்திலேயே இது விஷயமாக வேறு அபிப்பிராயம் கொண்டிருந்தார். இம்மாதிரியான காட்டுமிராண்டித் தனமான நடவடிக் கைகளை வெறுத்தார். அவரே எழுதி வைத்திருப்பது இதை நிருபிக்கிறது.

"சித்தப்பிரமை பிடித்தவரை அடிப்பதையோ, அல்லது வேறு விதமாக ஹிம்சை செய்வதையோ நான் அனுமதிப்பதில்லை. ஏனெனில் தான் என்ன செய்கிறோம் என்பதை அறிந்துகொள்ள முடியாமலிருக்கும்போது தனக்கு என்ன செய்யப்படுகிறது என்பதை எப்படி அறிந்துகொள்ள முடியும், இவ்வாறு அடி முதலிய ஹிம்சைகளினால் வியாதி அதிகமாகுமே தவிர குறையாது."

தன்னிடம் வந்த வியாதியஸ்தரின் குறிகளை நன்கு கவனித்து குறி களுக்குத் தகுந்தபடி தன்னுடைய ஔஷதங்களையே கொடுத்துவந்தார். தன்னிடம் 1792-ஆம் ஜூன் மாதத்தில் முழுப் பைத்தியமாக அழைத்து வரப்பட்ட க்ளோகன்பிரிங்கை 1793-ம் வருடம் மார்ச்சு மாதத்தில் நல்ல சுகதேகியாக ஆக்கி அனுப்பிவைத்தார்.

மற்றுமொரு முக்கிய சம்பவம் 1799-ம் வருடம் ஏற்பட்டது. அவ் வருடத்துக் கோடையில் ஸ்கார்லெட் ஜுரம் (Scarlet fever) என்னும் ஒரு மாதிரியான வைசூரி நோய் பெருவாரியாகத் தோன்றிற்று. ஹானிமென் இவ் வியாதியின் குறிகளைக் கவனித்து அவைகளுக்கும் **பெல்லடோன்னுவுக் கும்** உள்ள ஒற்றுமையை உணர்ந்து இந்த ஔஷதத்தை மிகவும் நுண்ணிய அனுப்பிரமாணங்களில் கொடுக்க, வியாதியைத் தடுப்பதற்கும் வியாதி வந்துவிட்டால் அதை நிவர்த்தி செய்வதற்கும் அதுவே உபயோகப்பட்டு விட்டது.

நாம் மேலே கூறிய இரண்டு முக்கிய நிகழ்ச்சிகளும், இவை போன்ற பல வெற்றிகளும் ஹானிமென் பாராட்டப்பட்டிருப்பார் என்று நினைக்கிறீர்கள் அல்லவா? ஒருக்கால் இதனுல் பலன் அடைந்த வியாதியஸ்தர்கள் தங்களுடைய இதய பூர்வமான நன்றியை மானஸீகமாகத் தெரிவித்திருக்கலாம். ஆனுல் இதைக் கண்டு பொருமையும் அசூயையும் கொண்டனர் பலர். இம்மாதிரியான வெற்றியை இதற்குமுன் தாங்கள் கண்டும் கேட்டுமிராத வகையில் ஒரு தனி மனிதன் வெற்றியடைவதை எவ்வாறு இதர வைத்தியர்கள் பொருப்பார்கள். தவிர தாங்கள் வைத்தியம் செய்து பணம் சம்பாதிக்க இருக்க வேறு ஒருவன் தன் மருந்தை இலவசமாகக் கொடுத்து, கௌரவத்தையும் புகழையும் அடைவதை வெறுத்தார்கள். அவர்களுடைய பாதையில் குறுக்கிட்ட ஹானிமெனுக்குப் புத்தி புகட்டியே ஆகவேண்டுமென்று தீர்மானித்தனர். உடனே அவர் மேல் கேஸ் தொடரப்பட்டது, ஔஷதம் தயாரிப்போரிடம் மருந்துகள் வாங்காமல் தன் ஔஷதத்தைத் தானே தயாரித்துக் கொடுத்தது குற்றமென்றும், இனி அவர் அவ்வாறு தன் மருந்தைத் தானே தயார் செய்யக்கூடாது என்றும் உத்தரவு பிறந்தது, எந்த இடத்தில் ஒரு புதிய வைத்திய சாஸ்திரத்தைப் பிறப்பித்து வியாதியஸ்தர்களிடையே நிருபணம் செய்தாரோ அதே இடத்திலிருந்து அவர் வெளியேற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது!

''பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்'' என்பது பழமொழி. இதற்கு நமது ஹானிமெனும் விலக்கல்ல. இருப்பிடத்திலிருந்து வெளியேற வேண்டிய கஷ்டம் வந்ததுடன் மேலும் மேலும் கஷ்டங்கள் வந்துகொண்டே இருந்தன.

'கோனிக்ஸ்லட்டர்' (Konigslutter) என்னும் ஊரிலிருந்து வெளியேறும்பொழுது, தன்னுடைய சாமான்களை ஒரு வண்டியில் ஏற்றிக் கொண்டு, தன் குழந்தை குட்டிகளுடனும் மூட்டை முடிச்சுகளுடனும் 'ஹாம்பர்க்' (Hamburg) என்னும் பட்டணத்திற்குச் செல்லும் மார்க்கத்தில் ஒரு இடத்தில் வண்டி குடைசாய்ந்தது. ஹானிமென்னின் கைக்குழந்தைக்குக் காயம் ஏற்பட்டு அதன் பின்னர் இறந்து விட்டது. அவருடைய பெண் ஒருத்தியின் கால் எலும்பு முறிந்து விட்டது. அவருக்கும் உடம்பெல்லாம் காயம் ஏற்பட்டது. இவருடைய ஆஸ்தியோ மிகவும் குறைவு; அவைகளில் பெரும் பகுதியும் பக்கத்திலிருந்த ஆற்றோடு போய்விட்டது. மிகுந்த கஷ்டத்துடன் பக்கத்திலிருந்த கிராமத்திற்குப் போய்ச் சேர்ந்தார். இங்கு அவர் பல வாரங்கள் தங்கும்படி ஏற்பட்டு விட்டது.

1800-ம் வருஷம், எப்பொழுதும் அவருக்கு மொழி பெயர்ப்பு வேலை கொடுக்கும் ஒரு கம்பெனியார் ஒரு ஆங்கில வைத்திய புத்தகத்தை

ஜெர்மன் பாஷையில் மொழி பெயர்த்துத் தரும்படி கேட்டுக்கொண்டனர். இது அக்காலத்தில் நடைமுறையில் கையாளப்பட்ட ஒளஷதங்கள் தயாரிக்கும் முறையைப் பற்றியது. இதை மொழி பெயர்த்து விட்டு அப்புத்தகத்திற்கு ஒரு குறிப்பும் எழுதினார் நமது தந்தை. அக்குறிப்பில்:

"இதிலுள்ள நல்ல தயாரிப்பு மருந்துகளில்கூட சில அம்சங்கள் நேர் விரோதமாகவும், இயற்கைக்கு விரோதமாகவும், எந்தப் பலனைக்கோறி அவைகள் செய்யப்படுகின்றனவோ அதற்கு நேர் விரோதப் பலன் அளிப்பவையாகவும் இருக்கின்றன. இந்த உண்மையை உலகம் அறியும் வண்ணம் பரப்பவேண்டியது அவசியத்திலும் அவசியமாகும்" என்று எழுதினார்.

இதன் பலன் என்னவென்று நினைக்கின்றீர்கள்? அவ்வப்போது வேலை கொடுத்து உதவிவந்த கம்பெனியின் நல்லெண்ணமும் உதவியும் அவருக்கு இல்லாமல் போய்விட்டது. இது இவ்வாறு நேறுமென்பது அவருக்கு முன்னமேயே தெரிந்ததுதான். எனினும் தான் கண்ட உண்மையை சொல்லாமலிருக்க முடியாது என்ற கொள்கையை நிரூபித்தார். பசிப்பிணி வாட்டினும், தன் குழந்தைகள் தன் எதிரிலேயே பட்டினி கிடப்பினும், தான் மொழிபெயர்த்த ஒரு வைத்திய புத்தகத்திலுள்ள அபத்தத்தை வெளியிட்டு எதிர்த்தே தீருவேன் என்ற பிடிவாதம் அவரை விடவில்லை. இதுவே பெரியவர்களின் பண்பு.

இவருடைய அறிவும் ஆற்றலும் ஆராய்ச்சியும் எவ்வளவு உயர்ந்தவையாக இருப்பினும், அவருடைய தேசத்திலேயே அவருக்குஞாயமும் நேர்மையும் கிடைக்கவில்லை. 1801-ம் வருடத்தில் அவர் எழுதிய ஒரு கட்டுரையில்

"ஜெர்மனி தேசத்து வைத்தியர்களே சகோதரர்களாக இருங்கள், ஞாயமாக நடவுங்கள், நேர்மையாக இருங்கள்"

என்று கூறினார். இதே விஷயத்தை இன்று வரையில் பல தேசங்களிலும், ஹானிமென் சிஷ்யர்கள் சொல்லிக்கொண்டேதான் வருகிறோம். "ஏழ்மை, துன்பம், முதலியவைகளும், அரசாங்கத்தாலும், இதரர்களாலும் ஒயாத தொல்லைகளும், கவிகளுக்கும், பெரியார்களுக்கும் ஏற்படுவது வழக்கம், இவைகளைப் பொருட்படுத்தாது தன் லக்ஷியத்தில் வெற்றி காணுவதுதான் இவர்களின் பெருமை" என்பது ஒரு பெரியாரின் வாக்கு. இது விஷயம் ஹானிமென் :விஷயத்தில் உண்மையாக ஆயிற்று, ஹானிமென்னுடைய வாழ்க்கை வரலாறை எழுதியிருக்கும் டட்ஜன் (Dudgeon) என்பவர் எழுதியிருப்பதைப் படித்தால் கல்நெஞ்சம் படைத்தவரும் கண்ணீர் விடுவார் என்பதில் ஆட்சேபமில்லை. இதோ கவனியுங்கள்.

"மாசர்ன் (Machern) என்ற ஊரில் வசிக்கும்போது பகல் முழுவதும் மொழிபெயர்ப்பு வேலையில் கஷ்டப்பட்டுவிட்டு இரவுகளில் துணி துவைப்பது போன்ற வீட்டு வேலைகளில் தன் மனைவிக்கு உதவி செய்வார். அவர்களிடம் சோப்பு வாங்குவதற்கு பொருள் இல்லாமையினல் சோப்புக்குப் பதிலாக உருளைக்கிழங்கை உபயோகிப்பர். இவர் சம்பாத்தியத்திலிருந்து வாங்கக்கூடிய ரொட்டி, இவருடைய பெரிய குடும்பத்திற்கு போதாதாகையால் ஒருவரும் புகார் செய்யக்கூடாது என்ற நோக்கத்துடன் ஒவ்வொருவருக்கும் சரிசமமாகப் பங்கிட்டே கொடுப்பார். இக்காலத்தில் இவருடை பெண்களில் ஒரு சிறுமிக்கு வியாதி ஏற்பட்டது. ஆகவே அன்றன்று தன் பாகத்திற்குக் கிடைக்கும் ரொட்டியை அப்பொழுது சாப்பிட முடியாததால் அவைகளை ஒரு பெட்டியில் வைத்து சேர்த்துவைத்தாள். அப்படி இவள் சேர்த்ததின் காரணம், தனக்கு உடல்நிலை சௌகர்யம் ஆனவுடன் இந்தக் காய்ந்த ரொட்டித் துண்டுகளையாவது வயிறு நிறைய உண்ணலாம் என்பதே. அக்குழந்தையின் வியாதி வரவர அதிகமாகி விட்டது. இனி தான் பிழைக்கமாட்டோம் என்று தோன்றி விட்டது; ஆகவே இனி தான் அந்த ரொட்டித் துண்டுகளைத் தின்னப் போவதில்லை என்று தீர்மானித்து தன் பிரியமான தங்கையிடம் தான் தேக்கி வைத்திருந்த காய்ந்த ரொட்டித் துண்டுகளை அவளுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தாளாம்."

இவ்வளவு ஏழ்மையிலும் கஷ்டத்திலும் அவருடைய ஆராய்ச்சிகள் நடந்து கொண்டேதான் இருந்தன. இவ்வாறு தொடர்ந்து நடந்த ஆராய்ச்சிகளின் பலனாக 1910-ம் வருடம் "ஆர்கனன் ஆப் மெடிசன்" (Organon of Medicine) என்னும் நூலை வெளியிட்டார். இந்நூலில் ஹோமியோபதியின் தத்துவங்களை விளக்கியதுடன் இதில் தான் முதன் முதலாக "ஹோமியோபதி" என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டது. இது ஏதோ அவசரத்திலோ, சரியான ஆராய்ச்சியின் அடிப்படையில் இல்லாமலோ தயாரிக்கப்பட்டதல்ல. ஆனல் ஒரு தேர்ச்சி பெற்ற வைத்தியரும் ரசாயன சாஸ்திரியுமான ஹானிமென் அவர்களால் சுமார் 20 வருடங்கள் தீவிரமாக ஆராய்ச்சி செய்து கண்டுகொண்ட உண்மைகள் ஆகும். ஆகவே 1810-ம் வருடத்தில் தான் "ஹோமியோபதி வைத்திய முறை" பிறந்தது என்று கூறலாம்.

ஆர்கனன் என்னும் இந்த ஹோமியோபதி வேதம், 1810-ம் வருடம் அர்னோல்டு (Arnold) என்பவரால் ட்ரெஸ்டன் (Dresden) என்னும் ஊரில் முதன் முதலில் பிரசுரிக்கப்பட்டது. இந்த அர்னோல்டு என்பவர் ஹோமியோபதியால் பலன் அடைந்த ஒரு நன்றியறிதலுள்ள ஒருவராகும். இந்த ஹோமியோபதியின் வேதம் வெளியானவுடன் ஹானிமெனுக்குக் கிடைத்த அனுபவம் எப்படிப்பட்டது என அறிந்துகொள்வது உபயோகமாக இருக்கும்.

(அடுத்த இதழில் முடியும்.)

சுகபேதியா? எமவாதையா?

by டாக்டர் S. ஆறுமுகம் M. I. H. ஐராவதநல்லூர்.

"நகத்தாலே கிள்ளுவதை கோடரி கொண்டு வெட்டுவதுபோல" மலச்சிக்கல்களையோ, மற்ற சிறிய உபாதைகளையோ போக்க பேதிக்கு மருந்து சாப்பிட்டு சரீரத்தை சுத்தம் செய்வதாகச் சிலர் நினைக்கிறார்கள். "எத்தனை புடம் போட்டாலும் இரும்பு பசும் பொன்னாகுமா"? அல்லது "கங்கையிலே மூழ்கினாலும் காக்கை அன்னம் ஆகுமா?" அவ்விதம் அவர்கள் மருந்து சாப்பிடுவது, அஸ்திவாரத்தில் தூர் பிடித்ததுபோல வயிற்றுப் போக்கு ஆரம்பமாகிறது. அப்பொழுது தான் மருந்து சாப்பிட்டவர், "ஈரைப் பேனாக்கி பேனை பெருமாள் ஆக்கினதாக" நினைக்கிறார். அது அவருக்கு "தலைவலி போய் திருகு வலி வந்தது" போல ஆகிவிடுகிறது. அதிகமாகப் போகும் வயிற்றுப் போக்கை நிறுத்த மறுபடியும் மருந்து சாப்பிடுகிறார். அது நான்கு நாட்களுக்கு மலமே போகாமல் இறுக்கி விடுகிறது, இனி மறுபடி பேதிக்குக் கொடுப்பதா? எனிமாக் கொடுப்பதா? அல்லது புகையிலைக் காம்பைத் தி னி ப் ப தா? இப்பொழுது கஷ்டப்பட்டால் என்ன செய்வது? "தலை நோவுக்கு தலையணையைத் திருப்பி போட்டால் தீருமா?"

என் ஊரில் நண்பர் ஒருவர் சுமார் 32 வயதுடையவர் இருக்கிறார். வைத்திய சம்பந்தமாக அனுபவமுடையவர். அவர் பேதிக்கு மருந்து சாப்பிட்ட கதையினால் தான் இக்கட்டுரை எழுத முற்பட்டேன். அவருக்கு நண்பர் ஒரு நாட்டு வைத்தியர் இருக்கிறார். அவர், "மகன் செத்தாலும் சாகட்டும் மருமகள் கொட்டம் அடங்கினால் போதும்" என்பதைப்போல, ஆள் செத்தாலும் சாகட்டும் பேதிக்கு போனால் போதும் என்று "அகஸ்தியர் குழம்பு" எனும் மருந்தைக் கொடுத்தார். அந்தக் குழம்புக்கு உப்பில்லையோ, புளியில்லையோ அது எனக்குத் தெரியாது,

வைத்தியர் காலை 5-மணிக்கு மருந்தைக் கொடுத்து விட்டு எங்கேயோ போய்விட்டார். சிறிது நேரத்தில் நண்பருக்கு வயிற்றுப் போக்கு ஆரம்பமாகி சுமார் 10 தடவை போனது. பிறகு வயிற்றில் வலி ஆரம்பமாகி வயிற்றுப் போக்கில் "மியூகஸ்" கலந்து பின்பு 9 தடவை போனது. சரீரம் இளைத்து விட்டது. நடக்க முடியவில்லை

ஆனாலும் வயிற்றுப்போக்கும் வலியும் நிற்கவில்லை. "உடம்பு போனால் போகிறது கை வந்தால் போதும்'' என்று ஆகிவிட்டது. ஏதேதோ பார்த்திருக்கிறார்கள் ஒன்றும் பாச்சா பலிக்கவில்லை. "கடப்பாரையை விழுங்கிவிட்டு சுக்கு நீர் குடித்தால் தீருமா?" பிறகு சிறிது நேரத்தில் சரீரம் பூராவும் தண்ணீர் மயமாக உள்ள வியர்வை, இந்தச் சமயத்திலும் கூட அவர் கலங்கவில்லை. அப்பொழுது தான் ஆள்வசம் எனக்குச் சொல்லியனுப்பினார்.

நான் புறப்பட்டுப்போய் பார்த்தேன். பிரக்ஞை இழந்துவிட்டார். தன்னையறியாமல் மலம் கழிக்கிறார். தர்மா மீட்டரை வைத்துப் பார்த்தேன், 95° தான் இருந்தது ஸ்டெதாஸ்கோப்பை கொண்டு சோதித்தேன். இருதயத் துடிப்பு இல்லை. நாடி பலவீனம். ஆனால் சுவாசம் பலவீனமாய் இருக்கிறது. எத்தனை தடவை வயிற்றுப் போக்கு போனதென்று கேட்டதற்கு, சுமார் 35 தடவை காலை 5 மணியிலிருந்து 8 மணிக்குள் போயிருக்கிறது என்றார்கள். "பனை ஏறி விழுந்தவனை கடா ஏறி மிதித்ததுபோல'' செய்து விட்டான் என்று. அவர் இறந்துவிட்டால் நம்மைச் சொல்லிவிடுகிறார்களோ என்ற பயம். சகோதரனைப் போன்ற உயிருக்குயிரான நண்பரை எப்படி ஒன்றும் செய்யாமல் விடுவது என்ற கவலை. "அதற்காக இழவுக்கு வந்தவள் தாலியறுப்பாளா?'' இருந்தாலும் ஒரு ஞாபகம் வந்தது. "சாகிற வரையில் வைத்தியன் விடான் செத்தாலும் விடான் பஞ்சாங்கக்காரன்'' எனும் பழமொழி. அதை சிரமேற் கொண்டு கவனிக்குங்கால் கார்போவிஜி 30 வீரியம் என் கண்முன் பட்டது. உடனே டிஸ்டில்டு வாட்டருடன் நான்கு சொட்டு கலந்து ஒரு ஊசி போட்டேன். மெர்க் சொலு 30. உள்ளுக்கு நான்கு வேளை கொடுத்தேன். சத்தியமாகச் சொல்லுகிறேன் 5 நிமிஷந்தான் இருக்கும். வியர்வை திடீரென்று குறைந்தது. கொஞ்சங்கூட இல்லை. பிறகு தர்மாமீட்டரை வைத்துப் பார்த்தேன் 97°க்கு வந்து விட்டது இருதயம் நிமிஷத்திற்கு 70 தடவை அடித்தது. நான் அப்பொழுது வேறொன்றும் நினைக்கவில்லை, நமது ஹோமியோபதி மருந்துகள் இவ்வளவு அபூர்வமாக வேலை செய்வதைக் கொண்டு உலகத்தையே சவால் கேட்கலாம் என்றுதான் நினைத்தேன். எங்கள் ஊரில் மிகவும் சாமர்த்தியமுள்ளவன் என்று என்னைப் புகழ்கிறார்கள். அந்தப் புகழ் ஹோமியோபதிக்கே உரியது.

பிறகு நோயாளி எல்லோரோடும் சாதாரணமாக உட்கார்ந்து பேசினார். அப்பொழுது வயிற்றுவலி மட்டும் கொஞ்சம் இருந்தது.

காலோஸிந்திஸ் 30 வீரியத்தில் 4 வேளைகள் கொடுத்தேன். பூரண சுகம் ஏற்பட்டது.

மறுநாள் காலை என் நண்பர் என் டிஸ்பென்ஸரிக்கு வந்தார். அவரைப் பற்றி கொஞ்சநேரம் பேசினேம். பிறகு அவர் எனக்கு ஒரு மருந்து சொல்லிக்கொடுத்தார். யாராவது விஷ சம்பந்தப்பட்ட மருந்தைச் சாப்பிட்டால் அம்மருந்தைக் கொடுக்கவேண்டுமென்ருர். அதற்குப் பெயர் "அகஸ்தியர் மெழுகு" என்ருர். உடனே எனக்கு அந்தக் குழம்பு ஞாபகம் வந்தது, எனக்கும் வயிற்றுப்போக்கு வந்து விடும்போல் இருக்கிறது என்று சொன்னேன். அவர் சிரித்துக் கொண்டு "குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டதுபோல" ஆனதை ஒப்புக்கொண்டார். "இருக்கிறவன் செம்மையாய் இருந்தால் சிரைக்கிறவன் செம்மையாய் சிறைப்பான்" என்று சொன்னேன். அதுவும் ஞாயந்தான் என்ருர். பேதிக்கு மருந்து சாப்பிடக் கூடாது என்பதையும் உணர்ந்தார்.

ஆகவே நமது ஹோமியோபதி முறைப்படி மலச்சிக்கலோ மற்ற உபாதிகளோ இருந்தால் வியாதிக் குறியென்றே கருதி அதற்கு மருந்துகள் கொடுத்து நிவர்த்திக்க வேண்டுமே யொழிய, மற்ற கெடுதல் செய்யும் பேதி மருந்துகளைக் கொடுக்கக்கூடாது என்று நமது ஹோமியோபதி அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி தற்சமய சாந்தியாக மலத்தை கழிக்கவைக்க வேண்டுமானல் ஒரு எனிமாக் கொடுப்பது உசிதமாகும் என்பது என் அபிப்பிராயம்.

விருதுநகர் ஹோமிபோயதி அஸோஸியேஷன்.

இந்நாளில் 16—3—52 ஞாயிற்றுகிழமை மாலை "ஹோமியோபதி அஸோஸியேஷன்" என்ற பெயரில் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு கீழ்க்கண்டவர்களை சங்க உத்தியோகஸ்தர்களாக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

திரு. M. சங்கரப்ப நாயுடு.	தலைவர்.
,, J. B. மனேகரராஜ	பொருளாளர்
,, A. D. ராஜன்	செயளாளர்

ஹோமியோபதியின் இன்றைய நிலை.

பெ. வேணுகோபாலன். M. I. H. மலாக்கா, (மலாயா.)

"ஹோமியோபதி" என்ற தமிழ்ச்சஞ்சிகை எனக்கு வருமுன் இதுதான் முதல் வெளியீடாகவிருக்கும் என எண்ணினேன். ஆனால் சஞ்சிகை வந்ததும், அது ஐந்தாவது வெளியீடு என்றும், ஏற்கனவே நான்கு வெளியீடோடு இச்சஞ்சிகை நிறுத்தப்பட்டதென்பதையும் யூகித்தறிந்து கொண்டேன். இவ்வித தனித்த ஒரு ஹோமியோபதி தமிழ்ச்சஞ்சிகை நமது தமிழ்நாட்டில் இடம் பெறச் செய்ய நம் தமிழர்களால் முடியவில்லை. என்றால், இது மிக மிக வருந்தத்தக்க செயலேயாகும். இனியும் இப்படி விட்டு விடாதீர்கள்.

பொதுவாகவே தமிழர்களிடத்தில். ஒற்றுமைக் குறைவு இவ்விதக்குறைவினால், உலகோர் மெச்சும், பாரதியையும் ஸர். ஸி. வி. ராமனையும், ஸர் ராதாகிருஷ்ணனையும், கனம் ராஜகோபாலாச்சாரியையும், இன்னும் அநேக கணித மேதாவிகளையும் தந்த நம்தமிழ்நாட்டின் பெருமை, இன்று குடத்திலிட்ட விளக்கென மங்கிக்கிடக்கின்றது. இதற்குத் தமிழர்கள்தான் பொறுப்பாளிகள். பாரதியார் "ஒற்றுமை நீங்கில் அனைவருக்குந் தாழ்வு" என்று கதறிவிட்டுச் சென்றிருக்கிறார். ஆகவே நாம் ஒற்றுமையுடன் வாழப்பழகிக் கொள்ளவேண்டும்.

ஏழைமக்கள் மலிந்த நமது பாரத கண்டத்தில் கொஞ்சப் பணச் செலவில் வியாதியை நீக்கி, பல்லாயிரக் கணக்கான இந்திய மக்களுக்கு இன்று உற்றதுணையாய் இருந்து வருவது, நமது ஹோமியோபதி வைத்தியந்தான். ஆசிரியர் Dr. V. ராமமூர்த்தி சொல்வது போல், இலக்ஷக்கணக்கான ஹோமியோபதி வைத்தியர்கள், கோடிக்கணக்காண மக்களுக்கு, சொற்பச் செலவில் சிகிச்சை செய்து, அவர்களின் சுகத்தைக்காத்து, இந்தியசர்க்காரின் பெயரைக் காப்பாற்றி வருகிறார்கள், என்பது மறுக்க முடியாத உண்மை. இவ்வுண்மையை சர்க்காரும் மறைமுகமாக ஏற்றுக் கொள்ளத்தான் செய்கிறது. ஆனால் ஏனோ ஹோமியோபதி வைத்தியத்துக்கு நம் நாட்டில் ஊக்கமளித்து இவ்வைத்தியர்களைப்பதிவு செய்து, இதர சர்க்கார் வைத்தியர்களுக்குக் கொடுக்கும் சலுகைகளைக்

கொடுக்கவில்லை? சர்க்கார் ஆதரவில்லா எவ்வித முயற்சியும் தூண்டுகோல் இல்லாத விளக்கொளிபோல் மங்கித்தான் கிடக்கும் இதன் மர்மம்தான் என்ன? ஹோமியோபதியர்களிடமிருந்து சிகிச்சை பெற்று சொஸ்தமானவர்கள்தான் ஏழைகள் நிறைந்த நமது இந்தியாவில் அதிகமாக இருக்கவேண்டும். இவர்களே இவ்வொப்பற்ற வைத்தியமுறையின் குணாதிசயங்களுக்கு சாக்ஷியங் கூறுவார்கள். அதிக பணச்செலவில் சிகிச்சை செய்துகொள்ள பணக்காரர்களால்தான் முடியும், அப்படி அவர்கள் பெற்றாலும் அது ஓரளவு உபசாந்தியானதாக விருக்குமே யொழிய பூரண சௌகர்யத்தைத் தருவனவாக இருக்காது. எனவே ஏழைகளுக்குப் பாடுபடுகிறோம், என்ற பிரமுகர்கள், ஹோமியோபதியர்களுக்கு ஐரோப்பா, அமெரிக்கா, பிரான்ஸு, ஜர்மெனி, முதலியநாடுகளில் ஓரளவு கொடுத்துவரும் சலுகைகளும், ஆதரவும் ஏன் கொடுக்கக் கூடாது.

ஆதரவற்று திரிசங்கு சுவர்க்கத்தில் ஊசலாடும், இவ்வற்புதமான, அதுவும் ஏழைநாடாகிய இந்தியாவிற்கு ஏற்றதான ஹோமியோபதி வைத்தியத்திற்கு, நமது சர்க்கார் பூரண ஆதரவு அளிப்பதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அவ்வளவும், இந்திய ஹோமியோபதியர்கள் ஒன்றுபட்டு செய்யவேண்டும். மறைமுகமாகப் பேசுவதும், வாய்வேதாந்தம் பேசுவதும், மேடைப் பிரசங்கங்கள் செய்வதும், அழகான கட்டுரைகள் பத்திரிகைகளுக்கு எழுதி பத்திராதிபரின் மதிப்புக்குப் பாத்திரமாவதும், நமது இலக்ஷியத்துக்கு நிரந்தரமான ஒருவித பலனையும் அளிக்காது. சகோதர சகோதரி ஹோமியோபதியர்களே உங்களது ஒற்றுமையைக் காட்ட இச்சஞ்சிகையைக் கருவியாகப் பாவித்துக் கொள்ளுங்கள். ஒன்றுபடுங்கள், ஒற்றுமையுடன் ஒரே மகாநாடு கூடுங்கள். ஒரு தலைவரின் கீழ் உங்களது பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்மானஞ் செய்யுங்கள். இனிய தமிழனின் பெயரைக் கெடுக்காதீர்கள். தமிழ்நாடெங்கனும் தழைத்தோங்குக ஹோமியோபதி என்று முரசு கொட்டுங்கள். தூரக்கிழக்கில் வசிக்கும் எங்கள் பலம் உங்களது பலத்தை பொறுத்ததே. நீங்கள் பலம் பெற்றால் எங்களுக்குத்தானகவே அந்தப்பலம் எங்களை வந்தடையும். உங்களது வெற்றி நிச்சயம்.

"தமிழனும் ஹோமியோபதியும் தழைத்தோங்குக"

திருச்சி மஹாநாடு

மூன்றாவது அகில தமிழ்நாட்டு ஹோமியோபதியர் மஹாநாடு நாளது 1952-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27உ யன்று திருச்சி இருதயபுரம் பொன்னையா உயர்நிலைப்பள்ளியில், ஆந்திர மாஹாண ஹோமியோபதி காலேஜ் தலைவர் டாக்டர் M. குருராஜு L. M. P. அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கிறது என்கிற விஷயம் வேறுபக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கும் நமக்குக் கிடைத்திருக்கும் செய்திகளிலிருந்து தெரிய வரும்.

தனி ஆந்திர மாகாணம், தமிழ் மாகாணம் என்று ஆங்காங்கே கூக்குரல்களை எழுப்பி நமது மாகாண அரசியல் சூழ்நிலையைக் குழப்பி கொண்டிருக்கின்றார்கள் பலர். ஆனால், 'அனைவரும் இந்திய மக்கள்' என்னும் நிலைமையை வலியுறுத்துவதே போல் ஒரு அகில தமிழ் நாட்டு ஹோமியோபதி மஹாநாட்டிற்கு ஒரு ஆந்திரர் தலைமை வகிக்கிறார். தலைவர் தமிழில் பேச இயலாதவர் என்பது வாஸ்தவமாக இருக்கலாம். அதனால் காரியம் ஒன்றும் கெட்டுவிடப்போவதில்லை. தலைவரின் உரையை மொழி பெயர்த்து விட்டால் போகிறது! மஹாநாட்டைத் திறந்து வைக்க ஹோமியோபதியிடம் அபார அன்பு கொண்ட ஸ்ரீ K. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் என்பது வரவேற்கத் தக்க விஷயம்.

புது மந்திரிசபை அமைக்கப்பட்டிருக்கும் இந்த மாதத்தில் திருச்சி அன்பர்கள் இந்த மஹாநாடு கூட்டுவது மிகவும் பொருத்தமாகவே இருக்கிறது. மஹாநாடு வெற்றியடைய நாமும் கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

ஆஸ்பத்திரி திறப்பு

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட்டில் படித்து பாஸ் செய்த மாணவர் திரு. எம். வெங்கட்ராமன் அவர்கள் தண்ணீர் பந்தல்பாளையம் என்னும் ஊரில் 17—3—52ல் ஒரு ஆஸ்பத்திரி திறந்து இருக்கிறார் என அறிகிறோம்.

தமிழ் நாட்டில் ஹோமியோபதி

மூன்ருவது அகில தமிழ் நாட்டு ஹோமியோபதியர் மஹாநாடு

1952 ஞு ஏப்ரல் மீ 27௨ ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திருச்சி டவுன் ஸ்டேஷன் ரோடு உருமி தனலெக்ஷிமி வித்யாலயத்தில் ஷை மஹாநாடு நடைபெறுமென்றும், ஆந்திர மாகாண ஹோமியோபதி காலேஜ் பிரின்ஸ்பால் டாக்டர் M. குருராஜு L. M. P. அவர்கள் தலைமை வகிப்பார் என்றும், திரு K. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள் மஹாநாட்டைத் திறந்துவைப்பார்கள் என்றும், K.M. வல்லத்தரசு B.A.,B.L., M. P. அவர்கள் ஹானிமென், காந்தி படங்களைத் திறந்து வைப்பார் என்றும், மற்றும் பல பெரியார்கள் மஹாநாட்டில் கலந்துகொள்ளுவார்கள் என்றும் திருச்சி டாக்டர் G. L. பிரகாசம் அறிவிக்கிருர்.

மதுரை ஜில்லா ஹோமியோபதி மெடிகல் பிராக்டீஷனர்ஸ் அஸோஸியேஷன்

ஷை அஸோஸியேஷனில் ஆரம்பக்கூட்டம் 30—3—52 அன்று ஏழுமலை ரூரல் டிஸ்பென்ஸரி டாக்டர் O. A. ஆண்டித்தேவர் அவர்களின் தலைமையில் கூட்டப்பட்டது. அதுசமயம் சங்க அவசியம் பற்றி பலர் சொற்பொழிவாற்றிய பின்னர் ஷை சங்கத்திற்கு Dr. V. R. சுப்பிரமணியம் தலைவராகவும், டாக்டர் K. S. M. நீதிராஜ் உபதலைவராகவும், V. பாக்கியநாதன் காரியதரிசியாகவும், டாக்டர் T. சுந்தரராஜன் உதவிக் காரியதரிசியாகவும், டாக்டர் K. S. ராஜமான் பொக்கிஷதாராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 11 பேர் கொண்ட ஒரு கமிட்டியும் தேர்ந்தெடுக்கப்பட்டது, என மதுரை V. பாக்கியநாதன் அறிவிக்கிருர்.

மேலூர் தாலூகா ஹோமியோபதி டாக்டர்கள் ஆதரவாளர்கள் சங்கம்

சென்ற 29—3—52 அன்று மாலை 5-30 மணிக்கு அழகர்கோவில் ரோட் சந்திரா பார்மஸீயில் ஷை சங்கத்தின் முதலாவது ஜெனரல்பாடி கூட்டம் ஸ்ரீமான் T. பழனிகுமாரு செட்டியாரின் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் Dr. A. P. S. ஆனந்தன், Dr. S. ஜான், Dr. S. S. ராஜாராம், Dr. M. K. குஞ்சம்பிள்ளை, Dr R. வெங்கட்ராயலு முதலியவர்களை முறையே தலைவர், உபதலைவர், காரியதரிசி உபகாரியதரிசி பொக்கிஷதார் என்று ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப், பட்டது,என்று டாக்டர் S. S. ராஜாராம் அறிவிக்கிருர்.

ஹோமியோபதியின் வேதாந்தம்

(பம்பாய் Dr. S. N. K. மூர்த்தி)

ஸ்லோகம் 165

அப்படி நாம் பொறுக்கி எடுத்த மருந்து கேஸில் உள்ள முக்கிய மான, விசேஷ விசேஷிய குறிகளுக்குப் பொருந்தாமல் ஆனல் சில பொதுவான குறிகளுக்கு மட்டும் பொருந்தியிருந்தால், இதுமாதிரி யான கேஸ்களில் நாம் மருந்து கொடுத்தவுடனே சமீபத்தில் ஒருவித குணத்தையும் காண முடியாது ஏனென்றால் பொறுக்கி எடுத்த மருந்து விசேஷக் குறிகளுக்கு ஒவ்வாமலிருப்பதுதான்.

ஸ்லோகம் 166

மேற்கூறியபடி ஏற்படுவது சில சமயங்களில்தான். பூருவிங் செய்யப்பட்டிருக்கும் மருந்துகள் பல. அவைகளில் நாம் ஒன்றைக் கவனமாக பொறுக்கி எடுத்துக் கொடுத்தும் ஏதாவது சில கெடுதலான குறிகள் தோன்றினல் அதை மறுபடியும் அப்பொழுது இருக்கும் குறிகளுக்குத் தகுந்த மருந்தை பொறுக்கி எடுத்து கொடுத்து நிவர்த்தி செய்து விடலாம்.

ஸ்லோகம் 16

தோன்றி மறையும் வியாதிகளில் (Acute diseases) மருந்து மிகவும் ஒற்றுமையாய் அமையாததினல் ஏதாவது சில புதிய குறிகள் தோன்றினல் அப்பொழுது மருந்து பூராவாகவும் வேலே செய்யா மலும் அதனல் வியாதியஸ்தர் அதிக காலம் மருந்தினுடைய வேகம் குறையும் வரையிலும் கஷ்டப்பட விடாமலும் நாம் அப்பொழுது இருக்கும் குறிகளுக்குத் தகுந்தபடியும் பழம் குறிகளுக்குத் தகுந்த படியும் பொருந்தும் மருந்தை பொறுக்கி எடுத்துக்கொடுக்க வேண்டும்.

ஸ்லோகம் 168

இப்படிச் செய்வதனல் நாம் பொறுக்கி எடுத்த மருந்து வியாதியை முழுவதும் சொஸ்தம் செய்யாவிட்டாலும் முன் இருந்த கெடுதலான நிலைமையைவிட சிறிது குணமாகும் நிலைமைக்கு வரும். நாம் மறுபடி யும் அவ்வப்பொழுது தோன்றும் குறிகளுக்குத் தகுந்தபடி மருந்துகளை பொறுக்கி எடுத்துக் கொடுக்கவேண்டும். வியாதியஸ்தர் முழுவதும் குணமடையும் வரையில் ஒவ்வொரு தடவையும் அவ்வப்போது

இருக்கும் குறிகளுக்கு ஒற்றுமையுள்ள மருந்தை பொறுக்கி எடுத்துக் கொடுத்துக்கொண்டே போகவேண்டும்.

ஸ்லோகம் 169

முதல் தடவை வியாதிக்குத் தகுந்த மருந்து பொறுக்கி எடுக்கும் பொழுது இரண்டு அல்லது மூன்று மருந்துகள் கொடுத்தால்தான் வியாதி முழுவதும் குணமடையும் என்று தோன்றலாம். சில கேஸ் களில் மிகவும் பொருந்தும் மருந்து இல்லாததினுல் (பூருவிங் செய்யப் பட்டவைகள்) சிலவே. (கற்றது கையளவு கல்லாதது உலகளவு) இப்படி தோன்றலாம். அப்பொழுது நாம் அந்த இரண்டு மூன்று மருந்து களில் எது மிகவும் பொருத்தமாயிருக்கிறதோ அதை கொடுத்தபிறகு மறுபடியும் மருந்து கொடுக்கவேண்டும்போது முன் பொறுக்கி எடுத்த பாக்கி மருந்துகளை கொடுத்துவிடக் கூடாது. முதல் மருந்து கொடுத்தபிறகு ஏற்பட்ட நிலைமைக்குத் தகுந்தபடி மருந்து பொறுக்க வேண்டும் ஏனென்ருல் வியாதியினுடைய தோற்றம் முதல் மருந்து கொடுத்தபிறகு நிலைமையில் மாறியிருக்கும். முதல் இருந்த நிலைமை யிலேயே இருக்கமுடியாது. ஒவ்வொரு தடவையும் மருந்து கொடுப் பது அவ்வப்போது தோன்றும் குறிகளுக்கு ஒற்றுமையுள்ளதாய் இருப்பது அவசியம்,

ஸ்லோகம் 170

ஒவ்வொரு தடவையும் வியாதி மருந்துகளினுல் மாறிக்கொண்டு வரும்பொழுது (முன்னுல் இரண்டாவதாக கொடுக்கவேண்டும் என்று நினைத்த மருந்தை எண்ணுமல்) அப்பொழுது தோன்றும் குறிகளுக் குத் தகுந்தபடி பொறுக்கவேண்டும் சில சமயங்களில் முதலில் கொடுத்த மருந்தே தற்போது காணும் குறிகளுக்கு ஒற்றுமையாக தோன்றினுல் அதையே மறுபடியும் கொடுப்பது அவசியம்.

[தொடரும்]

Edited, Printed & Published by Dr V. R. MURTY at the Homoeopathy Press
Homeo House, Kumbakonam.